முருகப்பெருமான் துணை

**மகான் வியாக்ரமர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

24.01.2023, செவ்வாய்கிழமை

1. அருட்பெருஞ் சக்தி வடிவான
அண்ணலே ஆறுமுக ஞானியே
அருட்சுடராக மக்களுள் கலந்து
அற்புதம் நிகழ்த்தும் மாதவசியே
2. தவசியே ஆறுமுக அரங்கனே
தானுன் பெருமை கூறி
அவனியில் சுபகிருது கலை திங்கள்
அறிவிக்க தசதிகதி குசன்வாரம்
(சுபகிருது வருடம் தை மாதம் 10 ம் நாள் 24.01.2023, செவ்வாய்கிழமை)
3. வாரமதில் அனுகூல ஆசியை
வழங்குவேன் வியாக்ரமர் யானும்
சோரமிலா வாழ்வுகாண மக்களுக்கு
சுத்தநெறி வழிகள்தனை உரைப்பேன்
4. உரைக்கவே அரங்கமகானும்
உலகினில் அவதாரம் எடுத்து
மறையென தருகின்ற ஞானம்
மாதவப் பலனாக வருதலுற
5. வருகவே அரங்கன் மார்க்கம்
வள்ளல் பெருமான் சன்மார்க்கமாம்
தருகின்ற குணத்தை உன்னுள் வளர்த்து
தன்னலம் கருதா உயர்வை தரும்
6. தருகின்றநல் தயவுமார்க்கமாம்
தரணியோர் பின்பற்றிவர
பெருமைதரும் குணநலமாக
பிழை நேரா வாழ்க்கை முறையாக
7. ஆகவே ஞானிகளை வணங்கும்
ஆக்கமும் ஊக்கமும் கூடி
மகான் அரங்கன் வழியில்
மார்க்கமாம் சைவத்தில் திளைத்து
8. திளைத்து எவ்வுயிர்தனையும்
தன்னுயிர் போல் மதித்துமே
பிழையற ஞான வாழ்வாக்கி
பெருமானார் ஆறுமுகக் கடவுளை
9. கடவுளை வழிபாடுசெய்து
கண்டுரைப்பேன் அரங்கஞானி
திடம்பெற தன் இடர் வெல்ல
தருகின்ற அன்னதான சேவை

10. சேவையை கைப் பற்றியே
செயலாக்கி தருமம் வளர்க்க
அவனியே தருமலோகமாகி
அனைவருக்கும் இந்த மாற்றம்

11. மாற்றம் மகா சக்தியாகி
மண்ணுலகையே மாற்றி நிற்கும்
ஆற்றல்மிக்க தரும ஞான
ஆட்சிக் காலமாக உதயமாகும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–